ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

धर्मएव हतो हन्ति धर्मो रक्षति रक्षितः ।
तस्माद्धर्मो न हन्तव्यो मानो धर्मोहतोऽवधीत् ॥

இந்தியாவிடுதலையடைய வேண்டுமென்ற விஷயம் எல்லோருக்கும் ஸம்மதமே. தாய் நாட்டின் விடுதலையை விரும்பாதவன் இந்தியனாகக் கருதமுடியாது. தற்காலத்தியவர்களின் தேசவிடுதலைக்கான எண்ணம் நிறைவேறிவிடுமானால் நம் தேசம் சுகமடையும் என்பதில் ஐயமில்லை. தேசம் விடுதலை பெறவேண்டுமென்ற எண்ணமுண்டாகி வெகுநாளாயிற்று. விடுதலையும் வெகு தூரம் போய்க்கொண்டே இருக்கின்றது. இதற்கு ஏதோ ப்ரதிபந்தகம் பலமாக இருக்கவேண்டும். இன்றேல், தேசக்ஷேமத்திற்குரிய முயற்சிகள் ஸரியாயில்லாமலிருக்க வேண்டும். ஸாதனங்கள் ஸரியாயிருந்தால்த்தானே ஸாத்யம் கைகூடும். ஸாதனங்கள் ஸரியா? இல்லையாவென்பதைத்தான் முதலில் யோசிக்க வேண்டும். இதனை ஒருவர் ஆலோசித்தால் போதாது. பல பேர் ஏகமனதுடன் கலந்து யோசிக்கவேண்டும். இந்தியா முழுதுக்கும் க்ஷீணதசையைப் போக்கி ஸ்வதந்திரம் ஸம்பாதித்துக் கொடுப்பது ஒரு பெரிய சிக்கலான காரியம். இதற்கு மதாபிமானமும் தேசாபிமானமும் கொண்ட பலருடைய மந்திராலோசனை அவசியம். இவ்விஷயத்தில் நமது ஹிந்து அரசாங்க முறையையே அனுஸரிக்கவேண்டும். சில ஆயிரம் வருஷங்களாக ஹிந்து அரசாங்கம் இம்முறையைத் தவறினதால்தான்நிலைபெறவில்லை. புதிய அரசியல் முறை நம் இந்தியாவிற்கும் பொருத்தமாகாதென்பதை நான் எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அது ஜனங்களிடம் பயன்படப்போவதில்லை. இப்போது ஸ்வதந்திரம் பெற விரும்புவோர் அரசியல் முறையில் புதிய கிளர்ச்சி உண்டுபண்ணுவதோடு நிற்காமல் புராதன ஆசார ஸம்ப்ரதாய முறையிலும் புதிய கிளர்ச்சி உண்டு பண்ணுகிறார்கள். இவ்விரண்டுமே ஸரியாய்த் தோன்றவில்லை. இந்தியாவிற்கு மதந்தான் பிராணன். அரசியல் முறையும் மதந்தான். இவ்விரண்டையும் வதைத்தால் நாமும் வதைக்கப்படுவோம். சாந்த எதிர்ப்புவாதமும் தேசத்துக்குப் பயன்படாது. எல்லாரும் சாந்தமாகவிருந்தால் தேசத்துக்கு பயன் உண்டு. எல்லோரும் சாந்தமாக இருக்கமுடியாது. எல்லோரும் சாந்தர்களாகவிருந்தால் அரசாங்கமும் அவ்வளவு அவசியமாயிராது. சாந்தமாக எதிர்ப்பதும் சண்டையில் தான் முடிவுபெருகிறது. நமது மதம் கடவுள் கண்டுபிடித்ததேயன்றி, மனிதர் கண்டுபிடித்ததல்ல. நமது மதத்திற்கு மூலதனம் வேதசாஸ்திரமே. இதன் மூலந்தான் உங்களுக்கு வெற்றி எற்படவேண்டும். ஆகவே வேதசாஸ்திரங்களையும், சாஸ்திரீய புராதன ஆசார முறைகளையும் நாடெங்கும் பரவச்செய்யுங்கள். உடனே உங்கள் கோறிக்கை ஸித்திக்கின்றதா இல்லையாவென்று பாருங்கள்.

சுபம்.

V. J. S.

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸ-ஸூ ஐப்பசி-மீ ௨௫௨

விகட கவியும், நந்தன் கதையும்.

விகடகவி என்றால் "கட்டுரைகளைக் கற்பிப்பவன்" என்று பொருள். இவனால் இவ்வுலகத்திற்கு இன்பமா? துன்பமா? நமது நாட்டில், கல்யாணகோலாஹல ஸமயங்களில், சிலர் விகடக்கச்சேரி வைப்பதுண்டு. அப்போது வதூ,வரன், ஸம்பந்தி, பந்து, முதலியோர் வேடிக்கையாக உட்கார்ந்துகொண்டு கேட்பார்கள். விகடக்கச்சேரி கேட்பதற்கு இவர்களெல்லோரும் ஏன்? உட்கார வேண்டுமென்றால்? சிரிப்பதற்காகத்தான் சிறந்ததத்வத்தையோ, சிருங்காராதிரஸத்தையோ, கான மஹிமையையோ, அனுபவிப்பதற்காகவல்ல. சிரிப்பதற்காக விகடக்கச்சேரி கேட்பதுஒரு தமாஷ். அப்படியே அந்த காலத்தில் சீட்டாடுவதும் தமாஷ். இப்படி சிரிப்பாச்சிரிப்பதனால் என்ன ஏற்படுமென்பது கேள்வியல்ல. விகடக்கச்சேரி ஒரு பொழுதுபோக்குக்கச்சேரி. இதில், சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும்,பாமரருக்கும், பிரியம் இவ்வளவவ்வளவென்று சொல்லமுடியாது. "இன்று விகடக்கச்சேரி" என்றால் போதும். இவர்களுக்குச்சாப்பாடுகூட அவச்யமில்லை. படித்தவருக்கும்கூட விகடக்கச்சேரியில் விசேஷப்பிரமையுண்டு.

விகடகவி கச்சேரிபண்ணத் தொடங்குவான். ஆதியிலும், அந்தத்திலும் மங்களமிவர்களும் பாடுவதுண்டு. அதுவும் விகடமாகவேதானிருக்கும். நடுவில் அனேக விசித்திர விகடங்களைச் செய்வான். நாய்போல் குலைப்பான். கிளிபோல் கத்துவான். ரயில் என்ஜின், மோட்டார், இவைபோல் ஊதுவான், தேவதாஸிக்கதை கூறுவான். நல்ல சங்கீத வித்வான்களைப்போல் பாடுவான். புரோஹிதனைப் புரளிபண்ணுவான். கச்சேரி நடுவில் சபையில் என்ன நடந்தாலும் அதையும் விகடத்தில் சேர்த்துக்

கொள்வான். இதைக் கண்டு இவனிடம் ஸபையோரொருவராவது கோபிப்பதில்லை. அதற்குப் பதிலாகச் சிறிப்பார்கள்.

விகடகவிக்குக் கூர்மையான புத்தி இருக்கும். இதனால்தான் அவனுக்குக் "கவி" பட்டம் ஏற்பட்டிருக்கிறது. "காளிதாஸன்" முதலிய மஹா கவிகள்கூட விகட கவியை ஆதரித்திருக்கின்றார்கள். மஹா கவிகள் செய்த நாடகங்களிலும் தற்காலம் டிராமா, ஸினிமா, ஸர்க்கஸ் முதலிய இடங்களிலும் விகடகவி ஒருவனுண்டு. அவனுக்குப் பரிகாஸமாய்ப் பேசி ஜனங்களைச் சிரிக்கச்செய்வதுதான் வேலை. டிராமாவில் முக்கிய ஆக்டர்களுக்குத் திருஷ்டிதோஷ பரிஹாரஞ் செய்வதும் மற்றொருவேலை. முக்கிய ஆக்டர்களும் இவ் விகடனோடு பேசுவதற்கு அஞ்சி ஒதுங்குவார்கள். ஏன் இவனுக்கு மானவமானமில்லை. ஏதாவது தாறுமாறாகப் பேசுவான் என்று.

சில வருஷங்களுக்கு முன் இக்கும்பகோணத்தில் "நந்தன் சரித்திரம்" டிராமா ஒன்று நடந்தது. பல ஸ்ரீமான்களும் ஸ்ரீமாட்டிகளும் டிராமாவுக்கு வந்திருந்தார்கள். ஸம்ஸ்கிருதம் படித்தப் பல பண்டிதரும் அதற்குப் போனார்கள். நாடகக் கொட்டகையெல்லாம் ஒரே கூட்டமாயிருந்தது. "ஒருநாளும் இவ்வளவு கூட்டம் வந்ததில்லை" என்று யாவரும் வியப்படைந்தார்கள். மணி 9-30, அடித்தது. உடனே வழக்கம்போல் முதலில் "ஸூத்திரதாரன்" ஒருவன் ஸ்டேஜில் வந்து ஜனங்களைப்பார்த்துக்கொண்டு நின்றான். அதன் பின்பு அவனைப் பின்தொடர்ந்து கொண்டு விகடகவியும் வந்தான். மற்றஆக்டர்களுக்கு "இன்னகாலத்தில் தான்" ஸ்டேஜில் வரவேண்டுமென்ற நிர்பந்தமுண்டு. இவ்விகடனுக்கு இந்நிர்பந்தமில்லவே இல்லை. எப்போதும் வரலாம், போகலாம். எதையும் பேசலாம் என்ற அதிகாரமுண்டு.

ஸூத்திரதாரன் கடவுள் வணக்கம் கூறிவிட்டு தாம் நடத்தப் போகின்ற நந்தன் சரித்திரத்தின் மஹிமையை ஜனங்களுக்கு எதிரில் சுருக்கமாகச் சொல்லத் தொடங்கினான்.

ஸ்ரீமான்களே! ஸ்ரீமாட்டிகளே!!

"இன்று நாங்கள் சிவபக்த சிகாமணி நந்தனுடைய சரித்திரத்தைப் பக்திரஸம் ததும்பும்படியான பாடல், ஆடல், ஸீன் முத

லியவைகளுடன் நடிக்க உத்தேசித்திருக்கிறோம். இந்த சரித்திரத்தால் "பக்திபண்ணிக்கொண்டிருந்தால் முக்திபெறலாம்" என்பதை யாவரும் தெரிந்துகொள்ளலாம். பக்திமார்க்கத்தில் இன்னாருக்குத்தான் அதிகாரம் என்ற வரம்பு இல்லை என்பதற்கு இச்சரித்திரமே முக்கிய ஆதாரம். பிறப்பாலும் தொழிலாலும் நீசனான நந்தன் பூர்வ புண்யவசத்தால் சிவபக்திசெய்து சிதம்பரத்தில் சிவஸாயுஜ்யம் அடைந்தான் என்றால், மற்றவருக்கு என்ன தடை. பக்தி மஹிமையை வெளிப்படுத்தவந்த இந்த நந்தன் சரித்திரத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு தற்காலத்தில் பலர் நந்தன் ஜாதியார் அனைவருக்கும் ஆலயப்பிரவேசாதிகாரம் அளிக்க வேண்டுமென்று சிபார்சு செய்கின்றனர்.

இந்த சரித்திரத்தில் தீண்டாமை விலக்குக்கும், தீண்டாதார் ஆலயப்பிரவேசத்துக்கும் அவகாசங்கொடுக்கப்பட்டிருக்கின்றதா? இல்லையா? என்பதை முடிவுவரையில் வெகு சிரத்தையோடு கவனித்துவிட்டுப் பிறகு முடிவுசெய்துகொள்ளும்படி வணக்கமாய்த் தங்களைப் பிரார்த்திக்கிறேன்"—என்று,

இதைக் கேட்டு ஸபையார் எல்லோரும் பரம சந்தோஷம் அடைந்தனர். ஆனால் கூடவிருந்த விகடன்மாத்திரம் ஆறாத மனத்துயரம் அடைந்தான்.

விகடன் புத்திசாலியானதால் தனக்குள்ளேயே ஆலோசிக்க ஆரம்பித்தான்:— "இவருடைய ஸெட்டில் நாம் விதூஷகனாக இருப்பது தப்பு. இவருடைய பேச்சிலிருந்து இவர் தாழ்ந்த வகுப்பினரிடம் மிகுந்த பொறுமைகொண்டவரெனத் தெரிகிறது. நாமோ விகடகவி என்ற ஹோதாவில் இவரது அபிப்பிராயத்தைக் கண்டனம் பண்ணுவோம். இவருமேதாவது பதில் சொல்வார். நாமும் ஸமாதானம் சொல்லலாம். முடிவில் நாடகம் நடைபெறாமல் போகும்படி செய்துவிடுவோம்" என்று சிந்தித்துக்கொண்டு ஸூத்திரதாரனை நோக்கிப் பின்வருமாறு பேசலுற்றான்.-

"ஐயா! நந்தன் சரித்திரம்தீண்டாமைவிலக்கு இயக்கத்திற்குப் பாதகம்போல் தங்களுடைய முகவுரையிலிருந்துதெரியவருகிறது. இது ஸரியில்லை, அக்காலத்தில் யார் நந்தனிடம் தீண்டாமை பாராட்டினார்கள். யார் ஆலயப் பிரவேசத்தையுந் தடுத்தார்கள். உண்மை இவ்விதமிருக்க தாழ்ந்த வகுப்பினரைக் கோயிலுக்குள்

வரக்கூடாது என்று தடுப்பது பாபம். மனிதர் எல்லோரும் பகவானுடைய புத்திரர்கள்தானே? சில மனிதரைமட்டிலும் கோவிலுக்குள் வரக்கூடாதென்பது பகவானுக்கும் பிரியமாயிராது, கருணையும் அல்ல. நியாயமும் அல்ல'' என்று விகடன் பேசினுன்.

ஸூத்திரதாரன் "அடே! விகடா உன் விகடம் வேடிக்கையாயிருக்கிறது. ஸபையோரைப்போல் நீயும் முடிவுவரையில் பொருமையுடன் இருக்கக்கூடாதா? விகடனென்று நடுவில் கிளம்பினுய் போலும்.'' இருக்கட்டும்.

"நந்தன் பூர்வ ஜன்மாவில் புண்யஞ்செய்து விவேகத்தையடைந்தும் ஏதோ ஒரு பாபத்தால் தீண்டாத வகுப்பில் ஜன்மமெடுத்தான். குழந்தை முதலே அவன் உத்தம சிவபக்தனுகவும், புலால் உண்ணல், முதலிய ஜாதித் தொழிலைக் கடமையெனச் செய்கிறவனுகவும், விளங்கிவந்தான். தற்காலத்தியவர்களைப்போல நந்தன் தன் தீண்டாமையை விலக்கிக்கொள்ள எவ்வித இயக்கமும் சட்டமும் கூட்டமும் ஏற்படுத்த முற்படவில்லை. நந்தன் தீண்டாமை விலக்கையும் ஆலயப் பிரவேச பாத்யதையும் அங்கீகரிக்கவில்லை. ஆனுல் ஆலய கோபுர தரிசனத்தைமட்டிலும் விரும்பினுன். அது யுக்தந்தான். தற்காலத்தில் அவர்களுக்கு ஆலயப் பிரவேசாதிகாரங் கொடுக்கவேண்டுமென்றல்லவா கோறப்படுகின்றது. இதற்கு நந்தன் கதை எப்படி ஆதாரமாகும்.

தவிர, நந்தனுக்கு மாணுந்தப் பிராயச்சித்த வடிவமாயுள்ள அக்னிப்ரவேசத்தால் சுத்தி எற்பட்டது. தற்காலத்திய நந்தன் குலத்தாருக்கு அவ்வித சுத்தி செய்வதாயிருந்தால் அதிகாரி யார். இந்த கதா பாகமும் தீண்டாமையைத்தானே திடப்படுத்துகிறது. பகவானுக்கு நந்தனிடத்தில் தற்காலத்தியவர்களுக்குப்போல் பிரியம் இருக்குமேயானுல் அக்னிசுத்தி எதற்கு? நந்தனுக்குப் பகவான் செய்த சுத்தியை மற்றவர் அனுஷ்டிக்க முடியுமா? தற்காலத்திய சுத்தி ஸமாஜமெல்லாம் இப்படிப்பட்ட சுத்தியைச் செய்யுமா? இவர்களுடைய சுத்திவாதமெல்லாம் அசுத்தியை அதிகரிக்கச்செய்யுமேயன்றி அழிக்கமாட்டாது. சுத்திசெய்துகொள்ளாமல் கோவிலினுள் நுழைந்தால் பகவானுக்குப் பிரியமாய் இராதுதான்.

பகவானுக்குச்சரீரம், கண், காது,மூக்கு, ராகத்வேஷம், பிரியம், அப்பிரியம், வேண்டினவன், வேண்டாதவன் என்பது ஏதாவதுண்டா? பகவான்நம்மைப்போல் ஒரு மனிதரா? ஆமாம் என்றால் அது உங்களுக்கு. எங்களுக்கு அப்படியல்ல. பகவானுக்குப் பிரியாப் பிரியம் உண்டென்றால் அவர் ஒரு ஸாதாரண க்ஷுத்ர மனிதரேயாவர். அப்படிப்பட்டவரை நாங்கள் பகவானென்று அழைக்க விரும்பமாட்டோம். ஒன்றுந்தெரிந்து கொள்ளாமல் "பகவானுக்கு அது பிரியமாயிராது" என்று விகடப் பிரகடனம் பண்ணாதே?

ஆதித் திராவிடர்களைக் கோவிலுக்குள் வரக்கூடாதென்றால் கருணையல்லவென்று புகன்றாய். பலே பேஷ்! நீதான் கருணாசாலீ. நந்தனை அக்னிப்பிரவேசம் செய்வித்த பகவானும் அவ்வளவு கருணாகரனல்ல. பகவானுடைய கருணையால் நந்தன் குலத்தார் முக்தியையா அடையப்போகிறார்கள்? நந்தனுக்கு முக்தியளித்த பகவான் நித்ய முக்தன். நந்தன் குலத்தாருக்கு முக்தியளிக்கப் பாடுபடுகின்ற நீ நித்ய முக்தனா? இந்திய ராஜ்யத்தையே ஏகதேசமாய்க் கட்டி ஆளவேண்டுமென்று பேராவல் கொண்ட உனக்கு இப்போது முக்தியேது? நந்தன் பிரபஞ்ச வாழ்க்கையை வெறுத்தான். நந்தன் குலத்தாரும் நீயும் பிரபஞ்ச நாகரீக வாழ்வை முக்கிய புருஷார்த்தமாக விரும்புகிறீர்கள்.

பிரபஞ்ச வாழ்க்கையில் சுகமடையும்பொருட்டும் "ஆலயப் பிரவேசம்" அவர்களுக்கு அவசியமில்லை.

எங்களில் சிலர், கோவிலுக்குப் போய்வருகிறார்கள். அதனால் பிரபஞ்சத்தில் அவர்கள் அனுபவித்துவருந்துன்பத்திற்கு அளவே இல்லை.

ஆலயப்பிரவேசம், பஞ்சமர்களுக்கு என்ன சுகத்தைக் கொடுக்கப்போகின்றது. அவர்களிடம் கருணை பாராட்டுகின்ற நீதான் என்னசுகம் அதில் கண்டாய். நீ உன் அறியாத்தன்மையையும், ஏழ்மையையும். கஷ்டங்களையும், நிவிருத்தித்துக்கொள்ள உன்னிடம் கருணைப்பாராட்டக்கூடாதா? நீ உன்னிடம் கருணை வைத்துக்கொண்டால் அது உலகத்திலும்வைத்ததுபோலாகுமே; உலகத்தில் கருணைவைத்தால், உன்னிடம் உனக்குக்கருணையில்லை என்று ஏற்பட்டுவிடுமே! நன் நீதியாய் உன்னிடம் கருணையா

ராட்டுகிறவர் யாராவது உண்டா? உனக்கு ஒருவருடைய கருணை வேண்டாமென்றால், இது ஒரு பித்தரோகம். இதற்கு இப்பூலோக வைத்யமுறை போதாது. எமலோக வைத்யம் வேண்டும். அதனால் சிகித்ஸை செய்தால்தான் இந்த ரோகம் போகும். அப்போது அந்த வைத்தியனுடைய கருணை உனக்கு அவச்யமாகத் தோன்றும். அதுவரையில், இந்த ரோகம் போகாது. ஒருவருடைய கருணையால் நீ ஜீவிக்க வேண்டியிருக்கப் பிறரிடம் கருணை பாராட்ட அதிகாரியாவது எங்ஙனம்? அவரவர் அவரவரிடத்தில் கருணைபாராட்டுவதுதான் நியாயம். ஆகையால் "கருணையல்லவென்று" பேத்தாதே.

பொதுக்கோவில்களில் ஆதித்திராவிடர்களைப் பிரவேசிக்கக் கூடாதென்று தடுப்பது நியாயமல்லவென்றாய்?

கோவில் பொதுவென்று உன் முயற்சியால்தான் ஏற்படுகிறது. இதுவரையில் கோவில் பொதுவாகவிருந்தால் ஆதித்திராவிடர் தம் பாத்யதையை இழந்ததற்கு என்ன காரணம்? பாத்யதை அவர்களுக்கு ஆலயத்தில் இருந்தகாலம் எப்போது? ஆதலால் ஆதித்திராவிடர்களுக்கு ஆலய பாத்யதை எக்காலத்திலுமிதுவரையிலில்லை என்பது அநுபவத்தாலேயே தெரியும்போது பாத்யதை இருந்ததுபோலவும், அதை யாரோ தடுப்பதுபோலவும் அதை மறுபடியும் கொடுப்பது அவசியம் போலவும் இதுதான் நியாயம்போலவும் பேசுகிறாயே? நீ இப்படிப் பேசுவதுதான் நியாயமல்ல. விகடனென்று விட்டேன். இந்த பதிலைக்கேட்டு ஆலோசித்துப்பார். மணி 1-30 ஆகிறது. நாடகம் நடக்கவொட்டாமல் தடுத்தாய். நாங்களும், ஆதித்திராவிடர்களின் ஆலயப் பிரவேசத்தைத் தடுக்கிறோம்.

ஸபையோர்களே! இந்த விகட கவியால் இன்று சரிதம் நடத்தப்படாமல் நிறுத்தும்படி நேர்ந்ததைக் குறித்துத் தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு நாளையதினம் நடத்தப்படும் இந்த சரித்திரத்திற்குக் கட்டாயம் தாங்கள் வந்து சேருவீர்களென்றுநம்புகிறேன்.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்

பகவான் பக்திக்குத் தான் கட்டுப்படுவார்.

(1045-ம் பக்கத்தொடர்ச்சி)

தீட்டினால் மந்திரக்கட்டு அவிழ்ந்துபோகும் என்று பயப்படுவது சாஸ்திரமாகாதென்று ஆசாரியர் எந்த சாஸ்திரப்படி சொல்கிறாரோ. புராணங்களை நன்றாய்ப் படித்தால் ஆசார்யருக்கு உண்மை விளங்கும்.

ஜனங்கள் ஒருமுகமானால் சாஸ்திரங்களை மாற்றலாமாம். அவ்விதம் ஒரு சாஸ்திரமும் கூறவில்லை. தவிர 100-க்கு 4-பேர்கள் வீதம் இவ்விதம் சாஸ்திரங்களை நாசம் செய்யப் புறப்பட்ட சீர்திருத்தக்காரர்கள் தன் எண்ணிக்கை அதிகமென்று சொல்வது அழகேயில்லை.

மகாத்மாகாந்தி, பண்டிதமதன்மோகன மாளவ்யா, ஸ்வாமி விவேகானந்தர், ஸ்வாமி சிரத்தானந்தர், முதலிய நம்காலத்துப் பெரியவர்கள் இந்துமதாபிமானிகள். அவர்களும் இந்த சீர்திருத்தம் அவசியமென்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள் என்கிறார். உயிர்த்துள்ள இருவரையும் இறந்த இருவரையும் கூறுகின்றனர்.

ஆசார்யருக்கு ஒருவார்த்தைப் பொதுவாய்க் கூறுகின்றேன். மதாபிமானிகளென்றால் மதத்தைப் பிரியமாய்க் கொண்டாடி அதன்படி ஒழுகுவதுடன் பிறரையும் அதில் ஒழுகச்செய்வார்கள். இதுதான் ஒவ்வொரு மதத்திற்கும் அழகு. இப்படிக்குக் காந்தி எந்த மதாபிமானி? எந்த சாஸ்திரப்படி நடக்கிறார்? தைவத்தின் பக்தியை எங்கெங்கு வெளியிட்டார்? அவர் பேசும்போதெல்லாம் பைபில் வேதத்திலிருந்து பல சமயம் தத்வம் வெளியிடுவதுண்டு. ஆகவே அவர் கிறிஸ்தவ மதாபிமானியாய் இருக்கலாம். கடவுள் என்று பொதுப் பெயர் சொல்வதைத் தவிற இந்து தைவத்தின் கோடானுகோடிப் பெயர்களைச் சொல்லிப் பேசியதாய்த் தெரியவில்லை. அவரை லோகாசாரியரென்று இவர்கள் கூறுவதுண்டு. ஆகவே அப் பெரியார் இவர்போன்றவர்கட்குத்தான் பெரியார். தவிற இந்துமதத்தைத் துலக்க அவதரித்தவரென்றும் கூறலாம். அதுவும் இவராலாகாது. 2-வது பெரியார் சாஸ்திரங்களைப்

படித்துவிட்டு உண்மையாய் இந்துமஹா சபை ஒன்று வேண்டு மென்று நல்லெண்ணத்தோடு ஆரம்பித்துப் பிறகு லௌகிக வலை யில் சிக்குண்டு இந்து மதத்திற்கு முதல் விரோதிகளான ஆர்ய ஸமாஜத்தவர்களைச் சேர்த்துக்கொள்ளும் சமயம் நேர்ந்துவிட்ட பிறகு அவரும் அம் மதத்தைச் சார்ந்துவிட்டார். ஆகவே அவ ரும் மேற்படிதான். பிறகு இறந்த இருவரையும்பற்றிப் பேச வேண்டாம்.

ஆதிதிராவிடர்களுக்கு வேறு கோவில் என்றும், மற்ற இந் துக்களுக்கு வேறு கோயிலும் என்றால் இந்து சமுதாயம் சிதறிப் போய்விடுமென்கிறார்.

இங்கு ஒன்று கவனிக்கவேண்டும். இப்போதுள்ள பிரா மண அப்பிராமணர்கள் ஒன்றாய்க் கோவிலில் தொழுகிறார்கள். பள்ளியில் பயிலுகிறார்கள். மற்றும் அநேக லௌகிகங்களில் கூடப் பழகுகிறார்கள். இவர்கள் ராஜீய விஷயத்தில் ஒத்துவரு கிறார்களா? இவர்கள் ராஜீய விஷயத்தில் வரும்போது பிராமணர் களை உதரித்தள்ளுகிறார்கள். இது இவர்காலத்தில் ஒன்றாய்ப் போய் பிராமணர்களிடமிருக்கும் மனக் கசப்பு அவர்களுக்கும் தீர்ந்துபோமென்று எதிர்பார்ப்பாரா. ஆகவே அவர்களைச் சேர்க் காத குறைதான் இப்போது தடங்கலாய் நிற்கிறதோ.

திரும்பித்திரும்பிக் கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர் என்ற பாட்டையே அர்த்தமில்லாமற் பாடுகிறார். கடவுள் மனிதர் களுக்கல்ல. விலங்கினங்களுக்கும் பொதுத்தான். அதை ஆக்ஷே பிப்பார் யாருமிலர். ஆனால் நாங்கள் தைவம் இப்படிப்பட்ட இடத்தில் இவ்வித ரூபத்தோடிருப்பார், இங்குவந்து தொழ விரும்புவர்கள் இன்னின்ன வரம்போடு வரவேண்டுமென்று ஏற் படுத்தியவிடத்தில் வரம்புமீறிதான் வருவேன், அந்த விளம்பரத் தை எடுத்துவிடு என்று சண்டைக்கு வருவது நியாயமாகுமோ. அன்னியர்கள் உள்ளே பிரவேசிக்கக்கூடாது என்று பலகை தொங்கவிட்டவிடத்தில்அநேகர் நுழைகிறார்களே, நானும் நுழை கிறேனென்று அதிற் சம்பந்தமில்லாத ஒருவன் நுழைந்த தவறு தலோடு நிற்காமல், இங்கு அநேகர் நுழைகிறார்களே, நான் மட்டி லும் நுழைந்தால் உனக்குவந்த கேடென்ன? என்று சண்டைக் கும் வருவதுபோலிருககிறது. ஆதித்திராவிடர்கள் எவ்வளவோ

கஷ்டத்திற்குள்ளாகியும் அவர்கள் இந்துமதத்தை விடவில்லை என்கிறார். அவர்கள் என்னென்ன கஷ்டத்தை யாரால் அடைந்தார்கள். அவர்கள் இந்துமதத்தை விடாமலிருப்பதால் பெருமை யாருக்கு? விட்டதனுல் வரும் சிறுமை யாருக்கு?

சொந்தமான பாத்யத்தைத் திரும்பிக் கேட்கிறாராம். அவர்களுக்கு எக்காலத்தில் உரிமை இருந்தது? திருப்பிக் கேட்பதென்பதற்கு அர்த்தமே இல்லை. இவ்விதமெல்லாம் இந்துமதத்தை வேருடன்பிடுங்க முயற்சிக்கும் இவர்கள் யத்தனம் தெய்வ சம்மதமாயின் நடக்கும். ஆனுல் நம் இந்துமதம் ஒருகாலம் இல்லாமலே போய்விட்டது? பிறகு மறுபடி பரவிற்று சரித்திரத்தில் என்று வாசிக்கவில்லை.

எத்தனையோ பிரமாணங்களை வைத்துக்கொண்டு இம் மதத்தை யுக்தியாலும்கத்தியாலும் அழிக்கவந்தகாலத்திலும் அழியாத நம்மதம் கேவலம் மனம்போனபடி யுக்தியில்லாத பேச்சினுலா அழிக்கப்படப் போகிறது? ஒருக்காலுமில்லை.

இவர் பேச்சுப்போலவே 7 பெயர்கையெழுத்திட்டு ஓர் கடிதம் வந்திருப்பதாயும் 29—10—32ல் மித்திரனில் ஒரு வியாஸம் வெளியாய் இருக்கிறது. அனுமதேயப் பேச்சுக்கு பதிற்கூற நமக்கு அவசியமில்லையென்று விடுகின்றனம், சுபம்.

எல்லாம் வல்ல ஈசன் துணை.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

தமிழ் நாட்டு ஆகம சபை—அறிக்கை நிர். 3

சுவா ராஜ்ஜிய காட்சி.

நீதிநெறி தவருத பாண்டியன்
தலைநகர் வாழ் வோரே!

வயது முதிர்ந்த அமெரிக்கன் கன்னி மிஸ் மேயோவின் தூது மிஷனரி ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் வருகிருர், வரு

கிறார்! தென்னிந்தியா ஆலயங்கள் விபசாரி வீடுபோலிருக்கிற தென்று வாயாரச்சொன்ன முடியில்லா மன்னனது போர்த் தலைவன் வருகிறார்!! பாண்டியர் காலத்திலும் முதல் தீண்டாமை கார்த்து வந்த தீண்டாதார்களுக்காக இக்காலத்து ஜாதிக்கொள்கையர்கள் பாபத்துக்குப்பரிகாரம் செய்துகொள்ளும்படி கட்டளையிடும் பெரிய புரோகிதரின் தலைமை சிஷ்யர்—சம்பந்தி ஆக விரும்பின அருமை சிஷ்யர் ஆச்சாரியார் —வருகிறார் வருகிறார்!! தேவதைகளோடு போர்புரிய சுயாராஜ்ஜிய யுத்தவீரன் வருகிறார்! மதுகைடபன்—ரக்தபீஜன் மகிஷன்—சண்டமுண்டன்—சும்பநிசும்பன் முன்னமேயே மாண்டார்கள். கலியில் ஸ்ரீ—மான் ராஜகோபாலன் போருக்கு வருகிற பலத்தைப் பார்! "ஆலயம் ஒழிக", "வைதீகம் ஒழிக", "ஜாதி ஒழிக", "மதம் ஒழிக", வெனவே சுவர் ராஜ்ஜிய பேரிகள் முழங்கவே, சுவா ராஜ்ஜிய கொடிகள் பறக்கவே வருகிற விமர்சை பார் பார் பார்! இருள் நிறைந்த பெருங்கூட்டம் எங்கும் சூழ்ந்திருப்பதைப் பார் பார் பார்!! கல்லடிமங்கன் போனது வழியாம், கோவில் கதவுகள் தவிடுபொடியாம்! சத்தியத்தின்பேரில் ஆக்கிரகத்தோடு போருக்கு எதிர்க்கும் கூட்டத்தைப் பார் பார் பார்!!!

சிவநேசர்களே, அஞ்சாதீர்கள் !மோசம்போகாதீர்கள்! அவரது மாயவார்த்தையில் மதிமயங்கி மத ஆசாரத்தைக் கைவிடாதீர்கள்—நாட்டையிழந்தோம், நகரையிழந்தோம், நற்கதியையும் இழக்காதீர்கள். வேப்பமாலை சூடிய வேந்தர்கள் செங்கோல் செலுத்தியது நீதியில்லையோ? வீரன், கருப்பன், வீராயி, மாரி மஹமாயி, மாகாளி, வேப்பிலைக்காரியும் அவ் வேந்தர்கள் நீதியைக் கார்க்கவில்லையோ? முரசும் தப்பும் பறையும் கொம்பும் தீண்டாத வேதியர்களைக் கார்க்கவில்லையோ? மதுரை நகர் காவல்தேவி கட்டழகு கன்னியாக விஜயநகர் நாயக்கத் தலைவன் ராஜகுமாரனை ஒளிவாள்கொடுத்து மதுரையைக் கார்க்க அழைத்தது எதற்காக? நீதிநெறி தவறியபோது கோவலன் காலத்து காளியாக மதுரையை அழித்தது எதற்காக? முடிமன்னர்களைத் தாழ்த்தும் அருமறை தவத்து இந்நகர்வாழ் கன்னி அருமறை "வேதம் ஒழியப்" பார்ப்பாளோ? எல்லாம் வல்ல சித்தாதி சித்தன் திருவிளையாடல்கள் நாமத்தை ஒழித்த ஸ்ரீமான் ஆசாரியருக்குச் சொப்படி வித்தையாம்—நீதிமுறை தவறிய சுவாராஜ்ஜியம் சொப்படி வித்

தையாய் <u>பட்பட்</u> எனவே தெறித்தோடும்—அன்னிய நாட்டார் இயற்றிய வோட்டுக்கு ஏங்கி வாடிவரும் கொக்குகளுக்கு மயங்கி உணவாகாதீர்கள்! எங்கும் நிறைந்த இறைவன் சொல் வீண் போகாது.—திருவிளையாடலில் சித்தன் காட்டிய ஜாதிவழி நின்றால் சித்தன் காப்பும் சித்தன் அருளும் எங்கும் பெருகி யாவரையும் காக்குமே—

கவனியுங்கள்! கண் விழித்திருங்கள்!!

உடன் பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்க வேண்டாம்
உடன் பிறந்தே கொல்லும் வியாதி—உடன் பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்துபோல்வாருமுண்டு.

R கணபதி அய்யர்,
அட்வகேட், கார்யதர்சி.

ஐரோப்பியர் நாகரீகம்.

லார்டு மேல்செட் இங்கிலாந்தில் மந்திரி பதவி வஹித்தவர். ராஜீய வாதிகளில் முதல் வரிசையில் உள்ளவர். சென்ற அக்டோபர்மீ 11ல பின் வருமாறு பேசினாராம். (Hindu 5—11—32, பக்கம் 2.)

"இப்போது நாம் எண்ணிறந்த சாமான்களை அபரிமிதமாய் உண்டுபண்ணுகிறோம். ஆனால், கோடிக் கணக்கான ஜனங்கள் எழ்மையான ஜீவனத்துக்குக்கூட வகையில்லாமல் தவிக்கிறார்கள். எந்த எந்த சாமான்களை எந்த நாட்டார் உண்டுபண்ணலாம், எவ்வளவு உண்டுபண்ணவேண்டும், என்று ஒரு திட்டம் தெரியாமல், எல்லா தேசங்களும் கைத்தொழில்களும் வியாபாரங்களும்புரிந்து வருகின்றன. 5000-மைலுக்கு அப்பாலிருந்து பருத்தி கொண்டு வந்து, இங்கே (சீமையில்) துணி நெய்து இதுவரையில் உலகமெங்கும் அனுப்பிவந்தோம். இப்போது அங்கங்கே பருத்தி விளையும்

இடத்திலேயே நூற்கவும் நெய்யவும் யந்திரங்கள் ஸ்தாபித்து விட்டார்கள். உன்னத ஸ்திதியிலிருந்த நமது லங்காஷயர் ஜில்லாவின் துணிநெசவு வியாபாரம் பாழ்த்துவிட்டது.''

''இத்தனை குழப்பம் உண்டாயிருப்பதற்கு ஒரு முக்கிய காரணம், அதிகாரிகளின் அறிவின்மையால் பணத்தின் உற்பத்தியும், அது ஜனங்களிடத்தில் புழங்கப்படும் முறைகளும், நிலையின்றி மாறிமாறிப்புரண்டுவருவதே ஆகும். பணத்தைக் கோடிக் கணக்காய்த் தேக்கி, நினைத்த இடங்களில் பாய்ச்சும் ஸாதனங்களைக் கைவசம் கொண்டிருக்கும் பாங்கிகளும், கோடீச்வரரான சிலர்களும், உழைத்தவனுக்கு உழைப்புக்குத் தகுந்த கூலியில்லாமலும், சாமான்களை உண்டுபண்ணுபவனுக்கு எதிர்பார்த்த அளவு வியாபாரமும், நஷ்டமில்லாத விலைகளும் கிடைக்காமலும் ஊடே புகுந்து, அடிக்கடி பணத்தின் உற்பத்தியையும், பணப்புழக்க முறைகளையும் திடீரென்று மாற்றி, ஒருவருக்கும் க்ஷேமம் நிலைப்படாவண்ணம் செய்கிறார்கள். இதையெல்லாம் பார்லிமேண்ட் திருத்தலாம் என்று எண்ணக்கூடும். ஆனால் அந்த ஸபையில் ஸூக்ஷ்ம புத்தியும், விஷய ஞானமும் உள்ளவர்கள் இல்லை. தற்காலரீதியில், அர்த்தமில்லாதவிஷயங்களைக் காதுக்கு இனிமையான மொழிகளில் சொல்லும் இயல்பு வாய்ந்தவன் ராஜீயத் துறையில் சீக்கிரம்மேன்மை பெறுகிறான். இரவெல்லாம் கண்விழித்து நுண்ணியபுத்தியுடன் நூல்கள் பல பயின்றவன், பார்லிமெண்டில் புகுவது அசாத்தியமாயிருக்கிறது. நமது ஜனங்களின் யோகக்ஷேம நிர்வாகம் இப்போதைய மாதிரியே இனியும் நடந்துவருமானால், நமக்கு ஹீனமும் க்லேசமும் மிகுந்துகொண்டேதான்வரும். அளவற்ற அறிவும் ஆற்றலும் உள்ள ஒரு தீரன் கிளம்பி, இப்போதிருக்கும் ஊழல்களை ஒரு வேகத்தில் ஒதுக்கித்தள்ளி, நமது நன்மைக்கான ஒழுங்குகளை ஸ்தாபித்தால், ஒருவேளை நமக்குக்ஷேமம் வரலாம். அல்லது, இன்னொரு வழியுண்டு. இப்போதுள்ள இரண்டுபார்லிமெண்ட் ஸபைகள் ஒருபுறமிருக்க, <u>மூன்றும் ஸபையொன்று</u> புதிதாய்நியமித்து, அதில் அறிவிலும், அனுபவத்திலும் எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெற்றவர்களைமாத்திரம் மெம்பர்களாய் வைத்து, அந்த ஸபையின் ஆக்ஞையின்படி நமது நடவடிக்கைகள் யாவும் நடந்தால், இப்போதைய குழப்பங்கள் நீங்கி, நாம் க்ஷேமம் பெறக்கூடும்.''

மேற்கண்ட பேச்சை ப்ரசுரித்திருக்கும் மான்சேஸ்டர் கார்டியன் என்ற பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது.

"பதார்த்தங்களை அபரிமிதமாய் பண்ணும் வகை மாத்திரம் தெரிந்து, அவைகளை எல்லாரும் சுகம் பெறக்கூடிய முறைகளில் விநியோகிக்கும்வழி தெரியாது தவிக்கும் இவ்வுலகத்தைக்கண்டு, ஆருத துக்கம் உண்டாகிறது. அமெரிக்காவில், விற்க வகையில்லாமல், எத்தனையோ லக்ஷம் டன்கள் காப்பிக்கொட்டையையும் கோதுமை தானியத்தையும் நெருப்பில் போட்டு ஒரு பக்கம் பொசுக்குகிறார்கள். மற்றொரு பக்கம் உண்ண உணவு இல்லாமல் பசியால் களைத்து பல்லாயிரம் ஜனங்கள் பரிதபிக்கிறார்கள். இந்தமாதிரி கார்யங்கள் நிகழ்கின்ற லோகம் பயித்தியக்காரர்களின் இடமா? அல்லது அறிவாளிகளின் உலகமா? லார்டு மேல்சேட் சொல்லுகிறபடி, நாம் பார்லிமெண்டை நம்பாமல், அறிஞர்களே நிறைந்த புதியதோர் சபையை நிர்மித்து அதன் மூலம் கதி மோக்ஷம் நமக்கு வந்தால் தான் உண்டு"

வியாபாரத்தில் உயர்ந்து பணத்தால் பெருத்து, வெள்ளைக்கார தேசங்கள் எல்லாவிதத்திலும் ஏற்றம் அடைந்திருப்பதாய் நமது ப்ரமுகர்கள் எண்ணி, நமது ஜனங்களும் அவர்கள் மாதிரி ஆகவேண்டுமென்று புத்திதான உபதேசங்கள் பல செய்கிறார்கள். அர்த்தவிஷயங்களில்கூட ஐரோப்பிய நாடுகள் இப்போது மெலிவுற்று, சிதைவுற்று, இன்னதுசெய்வதென்று தெரியாமல் திகைத்து ஏங்கிக் கிடக்கிறதை இவர்கள் ஏன் தெரிந்துகொள்ளவில்லை?

"ஐந்தடி வளர்ந்தால், ஆணானாலும் பெண்ணானாலும், ஓட்டுரிமை பெறட்டும்; கிராமபஞ்சாயத்துமுதல் அகிலபாரத சட்டசபைவரை, எங்கு பார்த்தாலும் எலெக்ஷன்கள் ஏற்படட்டும்; அரைப் பொய்யும் முழுப்பொய்யும் பத்தி பத்தியாய் வழங்கும் பத்திரிகைகளை, கால் படிப்புள்ளவர்கள் கவனமாய் வாசிக்கட்டும்; மதமும், ஜாதியும், குலமும், தர்மமும் அறவே ஒழியட்டும்; காக்கை வெள்ளையென்று மெஜாரிடியார் சொன்னால், அதுவே ஊர்ஜிதம்; ஞானம் வேண்டாம். ஒழுக்கம் வேண்டாம்; கூட்டமும், கலகமும், இரைச்சலும், க்ரோதமும் எங்கும் பாவட்டும்; ஆயிரம் பேரைக்கெடுத்து, நாலுபேர் வாழட்டும்;" என்று இம்மாதிரி ஆசை

கள் நமது இந்து ப்ரமுகர்களுக்கு ஏன் வரவேண்டும்? காலத்தின் விபரீதமா? அல்லது நாம் முன் செய்த தீவினையா ?

S. M.

ஸநாதன ஆர்யர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

ஆரியர்களே ! இனி உலகில் என்ன செய்யவேண்டும். நாம் மனிதர்கள். மற்ற விலங்கினமென்று பெயரிடப்பட்டமிருகங்கள் விலங்கினமல்ல. நாம்தான் விலங்கினப்பட்டோம். நம்மைத்தான் உலகில் பெரியோர்களது ஆக்ஞை ராஜாக்ஞை மேலான வேதத்தின் ஆக்ஞை கட்டுப்படுத்துகின்றன. யாரும் தன் மனம் போனபடி போகக் கூடாது. அதனாலேயே பால்யத்தில் பெற்றோர்களிடமும் கௌமார வயதில் குரு குலத்திலும் பிறகு வேதங்கள் தைவத்தினிடமும் கட்டுப்பட்டிருக்கிறோம். வேதத்தின் ஆக்ஞை எல்லாவற்றிலும் மிகப் பெரிதென்று நினைத்திருக்கிறோம். இதை எல்லாம் ஒட்டியே மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாமென்று ஒளவையும் பாடினாள். இவ்விதம் நடந்துவந்த நமமவர்க்கு காலதோஷத்தால் ஒவ்வொரு கட்டாய் விலக ஆரம்பித்தது. பால்யத்திலேயே தாய் தந்தையோர் சொற்கேட்பதில்லை. குருகுலம் எங்கேயோ, இனி இளமையில் இரண்டுமில்லாதபோது வேதமென்பதும் அதன் ஆக்ஞை என்பதும் ஏது? ஆனால்நம்மதத்தவர்போல் இக்காலத்தில் மற்றமதத்தவர்கள் வேதம்கற்காமலும் அதற்கு உயர்வு கொடுக்காமலும் இருக்கவில்லை. ஆகவே நான் சொல்வது நம்மவர் மட்டிலுமே சாரும். இத்தகைய நம்மவர் ராஜாக்ஞையையும் அலக்ஷ்யம் செய்து வருகிறார்கள். இனி ஏதாவது ஆக்ஞையுண்டா? மனம் போனபடிதிரிகிறஇவர்களது மனம் எப்படிச் செல்கிறதோ அப்படியே நடப்பதுடன் தன் வலிமையால் பிறரையும் அதில் இழுக்க முயலுகிறார்கள். இதை வளர்ப்பானேன்.

பிரகிருதம் நம்மதத்திற்கு பல வழிகளிலும் அனர்த்தங்கள் விளைந்துகொண்டே வருவதை அப்போதப்போது தடுக்காமல் நம் தலைவர்கள் தூங்குகிறார்கள். அதனால் வர வர நம்மக்கள் கெட்ட மார்க்கத்தில் தலையிடும்படியாயும் அவர்கள் முற்றிலும் நம்மத

விரோதமான செய்கை உடையவர்களாயும் செய்துவிட்டது. நாம் பிறரைத் திருத்த முன்வரவேண்டாம், உலகில் மதப்ரசாரம் செய்யவேண்டாம். அவரவர்கள் தங்கள் பிள்ளைகள் இப்போது நடக்கிற வழி வைதிகத்திலோ லௌகிகத்திலோ முன்னேறச்செய்யுமாவென்பதைமட்டிலும் அவரவர்கள் வீட்டில் கவனிக்கத்தொடங்கினால் போதும். அப்போது அவர்களுக்குத் தற்காலமுள்ள இங்கிலீஷ்படிப்பும் அதைக் கற்பிக்கும் பாடசாலைகளும் அங்கு கற்பிப்போர் முறை நல்லதா கெட்டதா என்பதும் விளங்கிவிடும். வீணாய் நான் ஆங்கிலப் படிப்பைப் பழிக்க முன்வரவில்லை. இப்படிப்பு நம் தேசத்திற்கும் நம்மதத்துக்கும் எவ்வளவு தூரம் நன்மை கொடுக்குமென்பதை பெற்றோர்கள் கவனிக்க வேண்டாமோ? இனி நாம் இதில்தான் இறங்கவேண்டும். இதற்கு முன் நான் முதலில் சொல்ல ஆரம்பித்த விஷயம் வேறு, வேலி நிலைத்தாலன்றோ தோட்டமாகும். நாம் தோட்டத்தில் பாடுபட ஆரம்பிக்கு முன் வேலியை பலப்படுத்துவோம்.

பிரகிருதத்தில், நம்மதமென்ற பெரும் தோட்டத்தை நம்மவர்கள் விகிதப்படி அநுபவிக்கும்படி நம் முன்னோர் கட்டிக் கொடுத்த வரம்பைத் தற்காலம் காங்கிரஸ்காரர்கள் குலைக்கப்பார்க்கிறார்கள். ஏதோ உலகத்திற்கு நன்மை தேடுவதாய்ச் சொல்லிக் கொண்டு அதையெல்லாம் செய்தாய்விட்டதாய்எண்ணிக்கொண்டு இனி மதத்திலும் சீர்திருத்தம் செய்வோமென்று நம் மதத்திலும் நுழைந்தார்கள் போலும். காந்தி நம் தேசத்தில் காங்கிரஸ் தலைவராய் ஆரம்பித்தும் தீண்டாமையை ஒழித்தல் என்பதையே கைக்கொண்டார். ஒவ்வொரு நிமிஷமும் அதையே சிந்தனையில் ஆழ்த்திக்கொண்டார். ஏதோ ஒரு வழியில் உலகில் பெரியார் என லௌகிகர்களால் புகழப்பெற்றார். இதனால் அவர் சொல்வதெல்லாம் வேதவாக்கென எண்ணத் தலைப்பட்டனர். தன் வாக்கையே காங்கிரஸ் வாக்கென வைத்துவிட்டனர். இத்தகைய இவர் இப்போது அவரது சகோதரரெனப் புகலப்படும் நம் ஆதித் திராவிடருடைய ஸகோதரரை நமக்கு விரோதமாய் கிளம்பும்படி வெகு காலமாய்ப் பாடுபட்டு இப்போது தன் முக்கிய மந்திரியான ராஜகோபாலாசாரியரின் மூலமாய் கோவிலுக்குள் பிரவேசிக்கவும் ஏற்பாடு செய்கின்றனர். இதைப்பற்றி நான் முன்னமேயே கூறி

யிருக்கிறேனாகையால் நம் ஆஸ்திக ஸகோதரர்களை மட்டிலும் இதைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆஸ்திகர்களே! காந்தி பேச்சுப்படித்தான் உலகம் நடக்க வேண்டுமென்று லௌகிகர்கள் நினைத்துவிட்டதுபோல் இனி மத விஷயத்திற்கும் அவர் தான் இனி குருவா? இதற்கு முன் காங்கிரஸ்காரர் சாரதாசட்டத்தை இயற்றப் பாடுபட்டபோது விவாகமென்பது மதவிஷயமல்லவென்று சொன்னதுபோல் இப்போது தீண்டாமை மதமல்ல ஒரு கொடுமையேயென்று தலைப்பெயருடன் 1—11—32 மித்திரனில் ராஜகோபாலாசாரியார் ஜயபேரிகை அடிக்கிறார். நாளை வரப்போகிற விவாகாத்து மசோதாவிலுமிது மதமல்லவென்று சொல்லப்போகிறார்கள். இதெல்லாம் மதமல்ல. வென்று சொல்லிக்ககாண்டேபோகிற இவரிடமிருந்துஇனிஇந்து மதமென்பதென்னவென்றாவது கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டுமா? சட்டசபையிலும் சுப்பிராயன் சட்டம் கொண்டுவந்துவிட்டார். சம்மதவோட்டுகளும் ஏராளமாம். இப்படியே நம் பெரியோர்கள் பொறுமையுடனிருக்கவேண்டியது தானா? **महाजनोयेनगतस्सपन्था:** நாலு மனிதர்கள் போகிறவழிதான் நமக்கும் என்று செல்வாக்குள்ள அவர்களையே நாமும் பின்பற்றவேண்டுமா? அப்படியே பின்பற்றினால், நம்மதம் என்ன ஸ்வரூபத்தோடு நிற்கும். இன்னும் மதவிஷயத்தில் நம்மைப் பின்பற்றிக்கொண்டிருக்கும் ஏராளமான பேதை ஜனங்களிருக்கின்றனரே. அவர்களைத் திடுக்கிடச் செய்கிற இப்போதிய அலை குலைக்கும்போது நம்மை அவர்கள் துரோகிகளென்று நிந்திப்பார்களே, அவர்களால் நமக்குக் கஷ்டமும் இவர்களால் நமக்குக் கஷ்டமும் நேருமே. அதை சமாளிப்பதெப்படி. ஆசாரியரின் அபிப்பிராயத்தில் அவர்களை நிறுத்த யாராலாவது முடியுமா? வேதங்களில் சண்டாளர் என்ற சொல்லுக்கு இவர்கள் அர்த்தமல்லவென்று வேதசாஸ்திரார்த்தமும் ஆசாரியார் சொல்ல முன்வந்துவிட்டார். சுப்பிராயனும் சொல்லுகிறார், இனி நம் பாஷ்யத்தைக் கிழித்தெறிந்துவிட்டு வேதார்த்தமும் அவர்களிடம் தான் கேட்டுக்கொள்ள காலம் வந்துவிட்டதா. மலைபோல் வருகிற அலையை எதிர்க்க நம்மால் முடியாது. ஆசாரியரும் அவ்விதமே விவாதம் பேசிவிட்டார். இனி நாம் செய்யவேண்டியதென்ன? எவ்விதம் நம்மினத்தை ஒன்றாகத் திரட்டமுடியும். ஒரு வழியும் இல்லையே!

ஈசனே! என்று பரிதபிக்கும் ஆஸ்திகர்களுக்கு அபயப் பிரதானம் கொடுக்க எந்த மகான் மூலம் பகவான் வரப்போகிறாரோ என்று உதவியவர்களுக்குக் கூடிய சீக்கிரம் பொதுக் கூட்டங்களுக்கும் பத்திரிகைக்கும் ஏற்பாடுசெய்யுங்கள் என்பதுதான் விக்ஞாபனம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

உ

மதிப்புரை.

சங்கரோபதேசரத்னம்.

பௌத்தாதி மதங்களால், பாரதகண்டம் முழுவதும் அதிநீச கதியுற்று நாஸ்திகமயமாய் விளங்குங்காலத்தில், "தர்மம் தாழும் பொழுதெல்லாம் நான் அவதரிப்பேன்" என்று திருவாக்கருளிய ஸர்வேச்வரன் சங்கரபகவத்பாதாளாகத் தென்னாட்டிலவதரித்து, தம் பதினாறாம் வயதிலேயே, பாஷ்யம்பிரகரணம் முதலிய கிரந்தங்களையெல்லாம் லோகோபகாரார்த்தமாக எழுதி முடித்து பௌத்தாதி மதங்களால் மதானுசார தசையிலுள்ள பாரதகண்டத்தை மீண்டும் புராதன பரிசுத்த நிலைக்குக்கொண்டுவந்த விஷயம் யாவரும் அறிந்ததே.

பகவத்பாதாளுடைய பரமப்பிரபாவம் பொருந்தியபாஷ்யாதிக்கிரந்தங்களின் தத்வார்த்தத்தைஸுலபமாய் யாவரும் தெரிந்துகொள்ளமுடியாது. அத்தகைய உத்தம கிரந்தங்களின் தத்வார்த்தத்தை யதார்த்தமாகவும் சுருக்கமாகவும், ஸாரமாகவும் பாமரர்களுமறியும்படியாகவும் பள்ளிக்கூடங்களில்பாடபுஸ்தகமாக அமையக் கூடியதாகவும், ஸாஹித்யவாங்முகபூஷணம், ஸ்ரீவத்ஸ,வெ.ஸோமதேவசர்மா அவர்கள் "சங்ரோபதேசரத்னம்" என்னுமிக்கிரந்தத்தில் விளக்கியிருக்கிறார்கள்.

இதில் பகவத்பாதாளுடைய 90 கிரந்தங்களும், அடங்கியிருக்கின்றன. இது 280.பக்கங்கொண்டது. சர்மா அவர்களின் மொழிபெயர்ப்பில் இரண்டு விசேஷம் முக்கியமாய் கவனிக்கத்தக்கது. "இந்த 90 கிரந்தங்களில் எதை நாம் அறிந்துய்யவேண்

டுமோ? அப்படிப்பட்ட முக்கிய விஷயத்தை மட்டிலும் வெளியிட்டிருப்பது" ஒரு விசேஷம்.

இன்னொரு விசேஷமென்னவென்றால் — மொழிபெயர்ப்பில் மூலபாஷாக் கிரந்தங்களிலுள்ள ரஸம் குறைந்துவிடுவது வழக்கம். இவருடைய மொழி பெயர்ப்பில் ரஸங் குறையாமலிருப்பதுமன்றி மூலக்கிரந்தங்களின் அத்புத பெருமையுங் காப்பாற்றப்பட்டிருக்கின்றது. நான்கு பதங்களுக்குமேல், ஒரு வாக்கியமும் இவர் மொழியில் காணமுடியாது. இனிய தமிழ் நடையிலுள்ள இக்கிரந்தம் ஒவ்வொரு ஆஸ்திகரது கிருஹத்திலும் வாசக சாலையிலும் இருக்கவேண்டியது அவசியம்.

பாத்மபுராணம்.

இது ஒரு பெருங்கடல். அனேக அத்புதவிஷய ரத்னங்களை தமக்குள் அடக்கஞ் செய்துகொண்டிருக்கின்றது. இப்போது இதினுள் நுழைய அதிகாரமும், அர்ஹதையும் பெற்றவர் ஒருவராவது கிடைப்பதரிது. இந்த சர்மா ஒருவர் தான் இதனுள்ளே நுழைந்து ஒன்றுமறியாத ஏழை மக்களுக்கு அனேக ரத்னங்களை வாரி வாரிக்கொடுக்கின்றார். இப்படிப்பட்ட உபாசாரம் வெகு உத்தமமென்பது இதை வாசித்தால் நன்கு புலனாகும். எதையும் சுருக்கஞ்செய்வது கஷ்டம்.

மார்க்கண்டேய புராணம்.

வேதங்களையே நம்பாத நம்மவர் புராணங்களையா நம்புவார்? புராணமெல்லாம் பகவானுடைய ச்வாஸமாகும் அதனை வேதத்தைப்போல்வேதவியாஸபகவான 18களாக வகுத்தார். வேதத்தை ரக்ஷிப்பதற்காக இவை ஏற்பட்டன. மார்க்கண்டேயமும் 18-க்குள் ஒன்றாகும். இதில் பேரின்பவீடுபெருவதற்கான அனேக தர்மங்கள் கதையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மார்க்கண்டேயரின் சரிதத்தைக் கூறுவதால் இதற்கு இப்பெயரேற்படவில்லை, மகரிஷிகளுக்கு மார்க்கண்டேயர் இதை உபதேசஞ் செய்ததால் இதற்கு இப்பெயர் வந்தது. படிக்கப்படிக்கத் திகட்டாத அனேக அத்புதவிஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. அமாகலாப்யாஸமற்ற இக்காலத்தில் இதை அமாகலாவிலாஸினீ ஆசிரியர்தான் தென்மொழியில் வெளியிட அதிகாரியாவர். "சர்மாவின் மொழிபெயர்ப்பு" என்பதே அது நன்றாயிருக்கும் என்

ப்பதற்கு ஒரு அடையாளம். இவ்வுலகுக்கு இவ்வளவு உபகாரஞ் செய்த இம்மகானுக்கு நாம் என்ன பிரத்தியுபகாரஞ் செய்வது.

"नरः प्रत्युपकारार्थी विपत्तिमभिकांक्षति"

இப்படியே 18புராணங்களையும் இனிய தமிழ் நடையில் வெளியிடும்படி இவரைப் பிரார்த்தித்துக்கொள்வதுடன் இக்காரியம் பூர்த்தியடைய ஆஸ்திகப் பிரபுக்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்யவேண்டியது முதற்கடமையாகும். இவ்வுத்தம கைங்கர்யத்தில் ஊக்கங்கொண்ட சர்மாவுக்கும், அதற்கு உதவியாயிருப்பவருக்கும் ஸர்வேச்வரன் ஸர்வாபீஷ்டங்களையும் அளிப்பாராக.

V. J. S.

மனுஸ்மிருதி அத்தியாயம் (3)

சில வசனங்கள்

1. சிஷ்யன் குருவின் அனுமதியின்பேரில் தன் சாஸ்திர விதிப்படிஸ்நானம் ஸமாவர்த்தனம் செய்து தன்ஜாதியாயும் சுபலக்ஷணத்தோடு கூடினவளாயுமிருக்கிறகன்னிகையை விவாஹம்செய்ய வேண்டும்.

2. தாய் வம்சகோத்ரமில்லாமலும், தகப்பன் வம்சகோத்திரமில்லாமலுமிருக்கிறபெண்தான் த்விஜனுக்குவிவாஹம் செய்து அக்னிஹோத்ரம் புத்ரோத்பத்தி, முதலான கர்மாவுக்குத் தகுதியாவாள்.

3. விவாஹ விஷயத்தில் பின்சொல்லிய பத்து குலத்தையும் அவர்கள் எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும் கோ, தன தான்ய ஸ்ம்ருத்தியுள்ளவர்களாயிருந்தாலும் த்விஜன் தள்ள வேண்டும்.

4. சாஸ்திர விதிப்படி நடக்காதவும், புருஷ பிரஜையில்லாதவும், வேதாத்யனம் செய்யாதவும், சரீரத்தில் தடித்த நீண்ட மயிரையுடையவர்களிருக்கிறவும்; வலிப்பு, பித்தவட்டை, க்ஷயம், குஷ்டம் முதலிய ரோகமுள்ளவர்களிருக்கிறவுமான குடும்பங்களைத் தள்ளவேண்டும்.

5. சிவந்த மயிர், அனுவச்பமான அங்கம், சீக்கு, மயிரின்மை, அதிமயிர், அதிக பேச்சு, சிவந்த கண்கள் இவைகளுள் பெண்ணை விவாஹம் செய்யக்கூடாது.

6. கலியாணப் பெண்ணுக்கு நக்ஷத்திரங்கள், விருக்ஷங்கள், நதிகள், கீழ்ப்பட்ட ஜாதிகள், பர்வதங்கள், பக்ஷிகள், பாம்புகள், தாஸர்கள் இவர்களின் பெயர் இருக்கக்கூடாது. பயங்கரமான பெயருமிருக்கக்கூடாது.

7. அங்கக் குறைவின்மை, இன்பமான பெயர், ஹம்ஸம், யானை இவைகளின் நடைபோன்ற நடை, மிதமான மயிர், சிறிய பற்கள், ரம்பமான சரீரம் இவைகளுள்ள பெண்ணை விவாஹம் செய்யவேண்டும்.

8. ஸஹோதரனில்லாத பெண்ணைப் புத்திசாலி விவாஹம் செய்யமாட்டான். அப்படிச் செய்தால் ஒரு ஸமயம் அவளுக்குப் பிறக்கும் பிள்ளையைத் தன் பிள்ளையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன்னமே தீர்மானம் தகப்பன் செய்திருக்கலாம். தகப்பன் தெரியாத பெண்ணையும் புத்திசாலி விவாஹம் செய்ய மாட்டான். அதனால் பாபம் நேரலாம் இதற்கு அனேக காரணங்களுண்டு.

9. த்விஜனுக்கு முதல் கல்லியாணம் தன் ஜாதிஸ்திரீயோடிருக்கவேண்டும். காமத்தினால் பிறகு செய்யும் கல்லியாணம் தன் ஜாதிக்கு வரிசைப்படி கீழ்ப்பட்ட ஜாதிப்பெண்ணுடிருத்தல் வேண்டும். இப்படிச் செய்வதுதான் உசிதம்.

10. சூத்ரனுக்கு சூத்ரஸ்திரீ, வைச்யனுக்கு சூத்ரஸ்திரீயும் வைச்யஸ்திரீயும், க்ஷத்திரியனுக்கு இவ்விரண்டு ஸ்திரீகளும் க்ஷத்ரியஸ்திரீயும், பிராம்பணனுக்கு இம் மூன்று ஜாதிஸ்திரீகளும் பிர்ம்மணஸ்திரீயும் விவாஹத்துக்கு உசிதமானவர்கள். இதுதான் சாஸ்திர சம்மதம்.

R. ஸ்வாமினாதய்யர்.

ஆர்யதர்ம பாடசாலை, தஞ்சை.

தஞ்சையில் சென்ற மூன்றுவருஷகாலமாய்ஒரு ஸநாதன தர்ம ப்ரக்ஷண ஸங்கமும் அதனாதரவில் ஒரு பாடசாலையும் நடந்து வருவதை நமது ஆஸ்திக சிநேகிதர்களறிவார்கள். இந்தப்பாடசாலையில் ஆண்குழந்தைகளும் பெண் குழந்தைகளுமாக சுமார் 150 குழந்தைகள் படிக்கிறார்கள். இதற்கு 'ஆர்யமதபாடசாலை' என்று பெயர். பழைய ஸம்பிரதாயங்களும் சுருதி ஸ்மிருதிகளுக்கும் விரோதமற்ற மதவிஷயங்கள் லௌகிகப்படியுடன் இந்தப் பாடசாலையில் போதிக்கப்படுகின்றன. குழந்தைகளை ஸ்வதர்மமார்க்கத்தில் பழக்குவது இந்தப் பாடசாலையின் நோக்கம். ஸம்ஸ்கிருத பாஷையை முக்கிய பாஷையாக கற்பிக்கப்படுகிறது.

இந்த பாடசாலையானது தஞ்சை வாசிகளான ஆஸ்திகர்களிடம் பிரதிமாஸமும் வசூலிக்கப்படும் தொகையைக்கொண்டு அநேகமாய் குழந்தைகளிடம் மாதசம்பளம் வசூலிக்காமல் வெகு சிரமத்துடன் நடந்துவருகிறது. இந்த சிரமத்தையறிந்து ஆர்யதர்ம ஸேவையிலீடுபட்டவர்களாய் சுமார் 50, ப்ராம்மண கனவான்கள் கூடி தஞ்சை முனிசிபாலிட்டிக்குட்பட்ட விடங்களை 9,வார்டுகளாகப் பிரித்துக்கொண்டு சென்ற தீபாவளிப்பண்டிகையன்று இந்த பாடசாலையையும் ஆர்ய தர்மத்தையும் காப்பாற்ற முன்வந்து வீடு வீடாய்ப்போய் உண்டி வசூல் செய்தார்கள். அன்று வீதிகள் தோறும் 'ஆர்யமத பாடசாலை தர்மம்! ஆர்யதர்மம் ஓங்கிவாழ்க!' என்ற ஆரவாரமாகவேயிருந்தது.

நேற்றுதினம் உண்டிகளையுடைத்து ரூ152-10-7, மொத்த வசூலென்று கணக்கிடப்பட்டது.

தஞ்சை ஸநாதன தர்ம ஸம்ரக்ஷண ஸங்கத்தின் நிர்வாஹ ஸபையார் தீபாவளியன்று இந்த கைங்கர்யத்திலீடுபட்டுதவின கனவான்களுக்கும், தங்களாலியன்ற பொருள் உதவிபுரிந்த ஆஸ்திகர்களுக்கும் தங்கள் மனப் பூர்வமான கிருதஞ்ஞதையையறிவிப்பதுடன் இத்தக்காலத்திலாவது குழந்தைகளுக்குச் சிறு பிராயத்திலேயே ஸ்வதர்ம மார்க்கங்களைப் போதிக்க ஆங்காங்குள்ள நம் ஸமூகத்தார் சிரத்தையோடு முன்வரவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

ஆங்கிரஸஹு துலாமீ 22உ } க. வெ. லக்ஷ்மணசாஸ்திரிகள்,
தஞ்சை } காரியதர்சி.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

ஸால்வராஜன்.

1. காட்டிலுள்ள பாண்டவர்களைக்காண கண்ணன் வந்தார். பந்துக்களைக் கண்டால் நம் துக்கத்தைச் சொல்வது வழக்கமல்லவா? பாண்டவர்கள் சூதாடி ராஜ்யத்தை இழந்ததைக் கூறினர். த்ரௌபதி தன் துணியை இழுத்து மானபங்கம் செய்ததைக் கூறினாள். அவர்களைப் பகவான் ஸமாதானப்படுத்தினார்.

2. அந்த ஸமயம் நான் ஊரிலில்லை. இருந்தால் சத்ருக்களை சும்மாவிட்டிருப்பேனா? உங்கள் யாகத்தில் சிசுபாலனைக் கொன்றேனல்லவா? அவன் ஸகோதரன் ஸால்வராஜன். அவனுக்கு என் மேல் அஸாத்ய கோபம் வந்தது. நானிங்கிருந்தபோதே த்வாரகைக்கு வந்து யுத்தம் செய்தான்.

3. அவன் தவம் செய்து ஸௌபகம் என்ற ஓர் விமானத்தைப் பெற்றான். அது அவன் இஷ்டம்போல் ஆகாயத்தில் போகும். அதைக் கொண்டு த்வாரகையை எதிர்த்தான். எனது தாதா உக்ரஸேனமகாராஜன் பட்டணத்தைக் காத்துவந்தார். யாதவர்கள் ஸால்வராஜனுடன் சண்டையிட்டனர்.

4. ப்ரத்யும்னன் முக்கியமாக ஸால்வனுடன் யுத்தம் செய்தான். மாயாவி ப்ரத்யும்னனோ சிறுவன். இருவருக்கும் மிகப் பயங்கரமான சண்டை நடந்தது. ஸால்வனது பாணத்தால் ப்ரத்யும்னன் அடிபட்டான். மூர்ச்சையாகத் தேரில் விழுந்தான். ஸாரதி தேரை அப்புறப்படுத்தினான்.

5. ப்ரத்யும்னன் கொஞ்ச நேரத்தில் மூர்ச்சைத் தெளிந்தெழுந்தான். எங்கே சத்ரு என்றான். ஸாரதி நடந்ததைச் சொன்னான். ப்ரத்யும்னன் தான் தோல்வி அடைந்ததை நினைத்து வருந்தினான். மறுபடியும் பலமாக யுத்தம்செய்தான். ஸால்வன் அடிபட்டு பயந்து தன் ஊருக்கு ஓடிவிட்டான்.

6. இதற்குள் நானும் ஊர்போய் சேர்ந்தேன். இதைக் கேட்டு எனக்குக் கோபம் வந்தது. ஸால்வ ராஜனிடம் சண்டைக்குச் சென்றேன். ஸால்வனுக்கும் எனக்கும் யுத்தம் நடந்

தது. அவன் பாணவேகத்தைப் பொறுக்கமுடியவில்லை. என் ஸாரதியான தாருகன் மிக் கஷ்டப்பட்டான்.

7. அதைப்பார்த்து எனக்கு அடங்காத கோபம் உண்டானது. பலமாக யுத்தம் செய்தேன். இதனிடையில் த்வாரகையிலிருந்து ஓர் தூதன் ஓடிவந்தான். எனது தந்தை வஸுதேவரை ஸால்வன் கொன்றுவிட்டான் என்றான். இதைக்கேட்டு என் மனம் துடித்தது. கண்ணீர் பெருகிற்று.

8. ஐயோ! என் அருமைத் தந்தையா இறந்தார்? அவர் இறந்தபின் எனக்கு எதற்கு ராஜ்யம்? நான் ஜீவித்திருப்பேனா? ஆ! அப்பா! என்னை விட்டுவிட்டு சென்றாயா? இதோ நானும் வருகிறேன் என்று குமுலிவிட்டு அழுதேன். தந்தையைவிடச் சிறந்த பந்து உண்டோ? ஆதலால் நான் கதறினேன்.

9. தூதன் என்னை ஊருக்கு வரும்படி அழைத்தான். கொஞ்சநேரத்திற்கெல்லாம் எனக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. இது மாயையல்லவா? என் தந்தையை அவன் எப்படிக் கொல்ல முடியும்? அவன் மாயையால் என்னை ஏமாற்றுகிறான் என்று எண்ணினேன்.

10. மிகக் கடுமையாக யுத்தஞ்செய்தேன். அவன் மாயையால் மறைந்திருந்து யுத்தம் செய்தான். ஸூதன் வேண்டிக்கொண்டபடி சக்ராயுதத்தை விட்டேன். அது அந்த விமானத்தை இரண்டாகப் பிளந்தது. ஸால்வனையும் கொன்றது. தேவர்கள் என்னைத் துதித்தனர். புஷ்பமாரி பொழிந்தனர்.

10. ஆதலால் நான் நீங்கள் சூதாடியதைத் தடுக்கமுடியவில்லை என பகவன் கூறினார். ஆபத் காலத்தில் பந்துக்களைக் காப்பது நம் கடமை.

வே. ஸோமதேவசர்மா.

ஒரு பிழைதிருத்தம்.

3—11—32 ல் வெளிவந்த 30-வது ஸஞ்சிகை 1013-வது பக்கம் "குருவாயூர் கோவில் காந்திஜீபின் எச்சரிக்கை" என்ற மகுடத்தின் 13-வது வரியில் "9 வது அத்தியாயம்" என்பதை 10வது அத்தியாயம் என்பதாகத் திருத்திக்கொள்ளவும். V. J. S.

பிராம்மணர்களே!

தம்மையே நொந்துக்கொள்ளுங்கள் :

பிறர் பேரில் பிசகு சொல்லாதீர்கள் !

ஆதிமுதல் காங்கிரஸ் ஸபைக்கு ஆதாவாய்நின்று, இப்போது அது நமது உயிரினும் அரிய மதக்கொள்கைகளை ஏசவும் எதிர்க்கவும் துணிவு வரும்படி, அதற்குப் பேரும் பிரதிஷ்டையும் உண்டு பண்ணினவர் யார் ? பிராம்மணர்களே !

இங்கிலீஷ் படிப்பு ஏறி, தம் குலத்துக்கு ஏற்காத புத்தியும் செய்கையும் எளிதிலே கைக்கொண்டு, புதுவாழ்வு வாழவே தலைப்பட்ட ஜாதி யார் ? பிராம்மணர்களே !

ஈசனது ஆணையால், நெறியிலே தாம் நின்று, தர்மமும் சீலமும் பிறருக்குப்போதிக்க, ஆதிகாலம்தொட்டு யார் கடமைப்பட்டவர் ? பிராம்மணர்களே !

தியஸாபி (Theosphy,) தாஸராய், சீர்திருத்தக்காரராய்,பல வானவிதங்களில் பழமையாம் கொள்கைகளை, கொல்லத் துணிந்த பேர் யாரென்று தெரியுமா ? பிராம்மணர்களே !

ஸ்ரீ காந்தியே பகவானின் பரமமான அவதாரம்; ஸ்ரீராமரும், க்ருஷ்ணனும், இவருக்கு இணையில்லை, என்று உலகோருக்கு உபதேசம் செய்தவர், ஒரு பிராம்மணரே !

பத்திரிகைப் பத்திகளில் பதினாயிரம் எழுதி,வேதத்தை சாஸ்த்ரத்தைப்பண்டைநாள் கொள்கையை,குதர்க்கங்கள்காண்பித்து, குறுக்கே கிழித்துவிட, யத்னமாய் நிற்பவர்கள் யாரென்று தெரியுமா ? பிராம்மணர்களே !

பதினாறு வயதான பெண்ணையே மணக்கலாம் என்று தம் ஜாதிக்கு ஹீனமாய் நிர்ப்பந்தம் வரவேண்டிப் பிடிவாதம் பண்ணினோர் யார் என்றால் ? பிராம்மணர்களே !

விதவா விவாகம் முதல் ஆலயப்ரவேசம் வரை, எல்லா விரோதமும் எங்கும் வளர்ப்பவர்கள், பிராம்மணர்களே !

"ஜாதியே தொலையட்டும்; ஆசாரம் அழியட்டும்; ஐரோப்பியர் நெறியை எல்லாரும் பற்றட்டும்; ஆஸ்திகரின் ஆலயம் சீட்டாடும் ஸ்தலம்போல, பொதுவான கூத்துக்கு இடமாக ஆகட்டும்; நமக்கேன் இப்பழி!" என்று ஒதுங்காமல், விபரீதங்கள் செய்யவே முன்வந்து நிற்பவர், பிராம்மணர்களே !

ஸி.ரா.ஆச்சாரியும், மைலாப்பூர் பாஷ்யமும், டி.எஸ்.எஸ்.ராஜனும், வரதாச்சாரியும், ஸந்தானம் அய்யங்கார், சங்கு ஸுப்ரமண்யன், புதுப்புரட்டல் தீரர்கள் உங்கள் வகையல்லவா ? பிராம்மணர்களே !

ஆதித்திராவிடர்கள் ஆலயத்தில் புகவேண்டும், என்று ஒரு பெரியார் கையெழுத்திட்ட பின், "பஞ்சமர்கள் உள்பட ஸமமான பந்தியாய் காப்பியும் இட்டலியும் எல்லாரும் உண்ணுவீர்; இல்லாதபக்ஷத்தில் லைசென்ஸு கிடையாது;" என்று பொள்ளாச்சி நிபுணர்கள் தீர்மானம் செய்தபின், பெரியார் திடுக்கிட்டு, "இத்தனை வேகமாய் ஓடினால் தலைசுற்றும்; சொத்துரிமை நசிக்காமல், சட்டநெறி மீறாமல், புதிதான புரட்சியை மெதுவாய் நடத்துங்கள்." என்று எச்சரிக்கை சொல்லும், பின்புத்தி, யாருக்குத் தோன்றிற்று தெரியுமா ? ஒரு பிராம்மணருக்கே !

தாமும் கெட்டு ஊரையும் கெடுக்கும் பிராம்மணர்களே ! வேலியே பயிரை அழித்தால் யார் என்ன செய்ய முடியும் ? தன் கண்ணை இழந்தவன் பிறருக்கு வழி காட்ட முடியுமா ? ஈசுவரன் தான் உங்களுக்கு நல்ல புத்தி அருளவேண்டும்!!

காந்திஜீயின் மாறுதல்.

ஸெப்டம்பர்மீ 20உ, அவர் பட்டினி தொடங்கினதும், "பட்டினிக்கஷ்டத்தை அவர் சிறைக்குள் படவேண்டாம். அவர் உயிர்விட நேரிட்டாலும், சர்க்கார் சிறைக்குள் மரித்தார் என்ற பழி உங்களுக்கு வேண்டாம். பட்டினி முடியும் வரையாவது அவரை வெளியே விட்டு வையுங்கள்" என்று சப்ரூ முதலானோர் சொன்னார்கள்.

"சட்டமறுப்பு கிளர்ச்சியின் கிட்ட வழி போகேன்" என்று காந்திஜி சொன்னாலொழிய விடமுடியாது என்று ஹோம் மெம்பர் சொன்னார். "நிபந்தனைக்குட்பட்டு நான் வெளிவரவேண்டாம்'

என்று காந்தி மறுத்தார். அவர் உறுதியையும் தீரத்தையும் கண்டு எல்லோரும் அப்போது வியந்தோம்.

"இப்போது தீண்டாமையை ஒழிக்கவும் ஹிந்துமதத்தை சீர் சீர்திருத்தவும் எனக்கு தீவ்ரம் வந்திருக்கிறது. இது சட்ட மறுப்பு இயக்கத்தில் சம்பந்தமேயில்லை. இந்து மதத்தின்பேரில் யுத்தம் நடத்த எனக்கு அனுமதி தர வேண்டும்" என்று காந்திஜீ தானாக கவர்ன்மெண்டைக் கேட்டார். "அப்படியே சரி; ஆனால் நீர் வரம்புக்குள்நிற்கவேண்டும்" என்ற எச்சரிக்கையுடன் இந்தியா கவர்ன்மெண்டார் இடம் கொடுத்திருக்கிறார்கள்.

ஸெப்டம்பர் மாதத்தில் சர்க்கார் மேலே காந்திஜீக்கு வேகம்; நவம்பர் மாதத்தில் இந்துமதக்கொள்கையை மாற்றுவதில் தீவிரம்; இப்படி காந்திஜி மாறினதைப் பார்த்து நாம் ஆச்சரியமும் துக்கமும் கொள்ளவேண்டியிருக்கிறது.

உ

श्रीकुम्भघोणविराजमान-

श्रीजगद्गुरुचन्द्रशेखरेन्द्रसरस्वत्यष्टकम् ॥

मन्त्रयन्त्रसारतत्ववेदिनीं प्रमोदिनीं
चन्द्रशेखरार्चने कृतादरां जगद्गुरुम् ।
इन्द्रमुख्यदेवपूज्यशङ्करांशरूपिणीं
चन्द्रशेखरेन्द्रनामिकां सरस्वतीं भजे ॥१॥

वीक्षणप्रधावितस्वभक्तपापसन्ततिं
शिक्षितापथप्रवृत्तदुर्जनां गुणांबुधिम् ।
माक्षिकेक्षुभङ्गदानदक्षनैजवाक्झरीं
चन्द्रशेखरेन्द्रनामिकां सरस्वतीं भजे ॥२॥

धर्ममार्गरक्षणैकदीक्षितां कृपालयां
शर्मदां समस्तजन्तुसन्ततेश्च सन्ततम् ।
निर्ममां निरन्तरान्तरुज्वलच्छिवां गुरुं
चन्द्रशेखरेन्द्रनामिकां सरस्वतीं भजे ॥३॥

अगमान्तखेलनैकतत्परां जगद्गुरुं
योगमार्गगामिनीं विशुद्धभूतिभूषिताम् ।
यागकर्मकारिणां सहायकारिणीं विभुं
चन्द्रशेखरेन्द्रनामिकां सरस्वतीं भजे ॥४॥

भक्तिपूर्वकात्मपादपङ्कजानमत्प्रजा
मुक्तिदानजागरूकशास्त्रबोधनोत्सुकाम् ।
युक्तिवादतोऽपि निर्जितान्यदुर्मतां गुरुं
चन्द्रशेखरेन्द्रनामिकां सरस्वतीं भजे ॥५॥

पण्डितेप्सितार्थदाननिर्जितामरद्रुमां
खण्डितातिदुष्टदुष्कालिप्रकृष्टचेष्टिकाम् ।
मण्डितावनीतलां महेश्वरांशतां गतां
चन्द्रशेखरेन्द्रनामिकां सरस्वतीं भजे ॥६॥

तोषितेन्दुशेखरां सुदूषितान्यदुर्मतां
भूषितातिपूतकाञ्चिकामकोटिपीटिकाम् ।
पोषिताखिलागमोक्तवर्यधर्मसञ्चयां
चन्द्रशेखरेन्द्रनामिकां सरस्वतीं भजे ॥७॥

सर्वमोदकारिचारुवाङ्मुखोज्वलां सदा
पर्वभासमानचन्द्रकान्तिभङ्गकृन्मुखाम् ।
पर्वतेन्द्रजांघ्रिपूजनोत्सुकां जगद्गुरुं
चन्द्रशेखरेन्द्रनामिकां सरस्वतीं भजे ॥८॥

चन्द्रशेखरेन्द्रदेशिकेन्द्रपादभक्तिभृत्
पञ्चपूर्वकापगेशशास्त्रिणा कृतं वरम् ।
अष्टकं निजेष्टदं पठन्ति भक्तितश्च ये
ते भजन्ति लोकगुर्वनुग्रहादभीप्सितम् ॥९॥

ஸாமவேத விளம்பரம்.

உலகத்தில் இருக்கிற சந்தோகர் (ஸாமவேதங்களுக்கு) விக்ஞாபனம்.

ஸாமவேதிகளே!

இப்பொழுது ஸாமவேத புஸ்தகங்கள் ஸாமகர்கள் ஸௌகர்யத்தை உத்தேசித்து அச்சுப்போட்டு இருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே.

புஸ்தகத்தில் ஒருவிதம் அச்சுபோட்டு இருக்க ஸாமகர்கள் பஸ்தகப்படி சொல்லாமல் அவாவர்கள் இஷ்டம்போல் வழக்கம் என்கிற வார்த்தையைச் சொல்லிக்கொண்டு ஸாம வேதத்தை வாயில்வந்தபடி சொல்லிவிடுகிறார்கள்.

இப்படிச் சொல்லும்பக்ஷத்தில் தேவதைகளுக்குப் பிரீதி ஏற்படாது.

ஸ்வரப்படி ஸாமவேதம் சொன்னால் தேவதைகளுக்கு விசேஷப்பிரீதி உண்டு.

புஸ்தகத்தில் "ஆயதை" என்று ஒரு அடையாளம் போட்டிருக்கிறது. அதைத் தெரிந்தவர்கள் யாராவது தெரிந்து சொன்னால் விசேஷ இனம் அளிக்கப்படும்.

ஸாமவேதம் பூராவும் அத்தியனம் செய்ய ஆஸ்தையுள்ளவர்களுக்கு 6-மாதத்திற்குள் புஸ்தகம்பார்த்து சொல்லும்படிஸ்வல்ப லக்ஷணத்துடன் சொல்லிவைக்கப்படும்.

ஆனால் ஸாமவேதிகள் எல்லோரும் என்னுடைய பிதாமஹர் பிரும்மஸ்ரீ ராமச்சந்திரசிரௌதிகள் (ராமண்ணு) பாடம் என்று மாத்திரம் சொல்லுகிறார்களே ஒழிய இப்பொழுது சொல்லிவருவதான ஸாமவேதமானது அந்த ராமண்ணு பாடம் இல்லை. (அல்லது புஸ்தகத்து ஸ்வரப்படியும் இல்லை. ஆனால் அவாவர்கள் வாயில்வந்தபடி சொல்லுகிறார்கள் என்று நிரூபணம் செய்யத் தயாராயிருக்கிறேன்.

ஆகையால் இனிமேலாவது சந்தோகர்கள் ஸாமவேதத்தை ஸ்வரத்துடன் சொல்லுவார்கள் என்று நம்புகிறேன்.

ஊருக்கு ஒருவிதம் பூர்வாபரவிஷயமும் பண்ணிவைக்கிறார்கள். ஸாமவேதமென்று எஜுர்வேதம்போல் பண்ணிவைக்கிறார்

கள். அதை அவர்கள் சீர்திருத்தம் செய்துகொண்டு எது சாஸ்திரம் என்று தெரிந்துகொண்டுசெய்தால் பிதுருக்களுக்கு விசேஷ மோக்ஷமும் தேவதைகளுக்கு திருப்தியும் ஏற்படும்.

இப்படிக்கு,
பிரம்மஸ்ரீ வேம்பு சிரௌதிகள்,
ஹார்மோனிய ஸாமகானம்,
வாகூர். வாகூர்போஸ்டு திருக்காட்டுப்பள்ளி வழி
தஞ்சாவூர் ஜில்லா,

வே. அகோர சிரௌதிகள்
பிரம்மஸ்ரீ வேம்புசாஸ்திரிகள் குமாரர்,
ஹார்மோனிய ஸாமகானம் வாகூர் (P. O.)
தஞ்சாவூர் ஜில்லா.

இந்த விளம்பரம் பிரமோதூத-ஹு சித்திரைமீ அச்சு போடப்பட்டது. பூமண்டலத்தில் எத்தனையோ ஸாமவேதிகள் இருக்கின்றார்கள். இவ்விதம் அச்சு ஏன்போட்டாய் என்று கேழ்க்கின்ற யோக்யதையில்லாமல் இருக்கிறார்கள். எத்தனையோ உத்தியோகஸ்தர் வக்கீல்கள், எத்தனையோ சாஸ்திரிகள், கிரஹஸ்தர்கள் இருக்கிறார்கள் இத்தனைபேரும் ஏன் கவனிக்காமல் இருக்கிறார்கள்.

ஆ. கிருஷ்ண சாஸ்திரிகள்.

வாரவிருத்தாந்தம்.

பக்தர் வழிகாட்டுகிறார். 17உ விரிஞ்சிபுர ஆலயத்தில் சண்டாளர்கள் உள்ளே நுழைய ஆரம்பித்தனர். அச்சமயம் பக்தர்கள் ஒன்றுகூடி குறுக்கேநின்று அதைத் தடுத்தனர். பலருக்கு பகவத் பக்தியால் ஆலயத்தை அசுத்தமாக்கும் அன்யரிடம் கோபம் வருவது ஸகஜம். சிவலிங்கத்தைக் காலால் உதைத்த தந்தையின் காலை மைந்தன் வெட்டக்கிளம்பியதைப் புராணத்தில் கேட்டிருக்கிறோம், நல்லவேளையாக இத்தகைய கார்யமங்கு நடவாததற்கு ஸந்தோஷிக்கிறோம். இத்தகைய நிலையை நினைத்து ஸ்ரீகாந்தி தன் சிஷ்யர்களை அடக்குவாரா?

ஸத்ஸபைகள். 17உ ஆழ்வா திருநகரியில் ஆலயத்தில் ஓர் ஆஸ்திகசபைகூடி ஷை இயக்கத்தைக் கண்டித்தது. 21உ சென்னை

யில் ஓர் பெரும் ஸபை கூடி விரைவில் ஓர் மஹாநாட்டை நடத்தி தர்மப்ரசாரம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது. இத்தகைய வைதிக ஆஸ்திக சபைகள் கூடி தக்க முயற்சி செய்யவேண்டும். இல்லையேல் அடுத்த சட்டசபையில்வரும் ஓர்சண்டாளரை உள்ளே விடாத ஆலயங்களுக்குப்படி இல்லை. விடாதவர்களை சிக்ஷிப்ப துண்டு என்ற சட்டம் பாஸாகிவிடும்.

டாம்பிகவழ்வை விடுங்கள். 23உ காச்சியில் ஸ்ரீமான் ப்ரயில்ல சந்த்ரராயர் என்ற வங்காள வித்வான் ஓர் அருமையான உபன்யாஸம் செய்தார். அதில் தற்கால இந்தியர் மேனாட்டு நாக ரீகத்திற்காளாகி நம் நாட்டு வழக்க ஒழுக்கங்களை விட்டதைக் கண்டித்து டாம்பிக வாழ்க்கையை விடுங்கள் என்று உபன்ய ஸித்தார். 20கோடி ரூபாயுக்கு சீமைபீடி இறக்குமதியானதைக் குறித்து வருந்தினர். இதைத் தடுப்பதுபோன்ற வேலையில் தேசிய ஸபை ஈடுபட்டால் தேச மோக்ஷம்.

பங்க்தி இல்லையோ. 24உ பம்பாயில் நடந்த நல் விவாஹத் தில் ஓர் கனவான் மந்திரிகளும் மற்ற உபாத்யாயர்களுக்கும் ஓர் விருந்து நடத்தினர். அதில் சண்டாளருக்குத் தனியாக ஓரிடத் தில் ஏற்பாடு செய்திருந்தார். அவர்கள் எல்லோருடனும் ஸம பங்க்தியில் உட்காரவேண்டுமென்றார்கள். விருந்து நடத்தியவர் ஸமபங்க்தி இல்லை. இந்த ஏற்பாட்டை மாற்றமுடியாது. இதற் கிஷ்டமில்லாவிடின் போகலாம் என்றார். இந்த தீரரது செயலை ஆதரிக்கிறோம்.

நான்கு உபதேசம். 24உ மைலை பென்னாத்தூர் ஸுப்ரமண்ய அய்யர் கலாசாலைக்கு ஸ்ரீஜகத்குரு விஜயம் செய்து மாணவருக்கு நாலுபதேசம் செய்தனர். காலையில் ஸ்வாமியைத் தொழு. ஸத் யமே பேசுவதாக ஸத்யம்செய். மாணவருக்குமட்டுமல்லாது மானவருக்கே ஏற்ற அரிய உபதேசமிது. ஆஸ்திகரிதைக் கைப் பற்றுக.

நரகத்தில் தள்ளாதீர். 24உ காசியிலுள்ள மிக ப்ரபலவைதி கர்கள் ராஜப்ரதிநிதிக்கு ஓர் மகஜர் அனுப்பினர். 16, கோவில் அதிகாரிகள் 39, பண்டிதர்கள் 55, பக்தர்கள் 29, தீண்டாதார்கள், இவர்களிடம் ஓர் வாக்குமூலம் வாங்கி அத்துடன் சேர்த்தனுப்பி னர். அதில் சண்டாளர்கள் கோபுர தர்சனத்தால் எங்களுக்கு பூர்ண பலன் கிடைக்கும். கோயிலுக்குள் சென்றால் நரகத்தில்

விழ்வோம் என்று கூறியிருக்கின்றனர். இங்ஙனம் அவர்களை நல்வழிப்படுத்தி அவர்களுக்கு சாஸ்திரீயமான உரிமைகளை அளித்து அன்னபானத்திற்கு வழிசெய்து அவர்கள் மூலமாகவே வேலைசெய்ய தென்னாட்டு மஹாபிமானி முன் வருவரோ?

திருந்துவரா? 25உ கும்பகோணத்திலுள்ள பண்டிதோத்த மர்களும் ஆஸ்திக சிகாமணிகளும் ஒன்றுகூடி தீண்டாமை விஷயத்தில் தீவ்ர முயற்சி செய்யும் ஸ்ரீராஜகோபாலாச்சாரியாரை அழைத்து அழகாக வாதம்செய்தனர். சாஸ்த்ரார்த்தத்தை விளக்கினர். அவர் புத்தி திருந்துமா? ஸ்ரீபரமாசார்யாள் உபதேசத்தைக் கேட்டபின்பும் அவர் திரும்பவில்லையெனில் அவர் கலியின் தூதரென்றே சொல்லவேண்டும்.

வேதத்தின் பூதக்கண்ணாடி. ஸ்ரீஜகத்குரு பகவத்பாதாள் பதினான்கு வித்யாஸ்தானங்களைப்பற்றி உபன்யஸிக்கும்போது புராணத்தைப்பற்றி ஷெ வாகமிருதத்தைச் சிந்தினார்கள் "இது தான் படித்ததற்கு பிரயோஜனம் இப்படியே பதினெட்டு புராணங்களையும் எழுது. அவச்யம் இதை எல்லோரும் படிக்கவேண்டும். நானும் படிக்கிறேன்" என்று புக்கை க்ஷேத்திரத்தில் "பாத்மம் மார்க்கண்டேயம்" என்ற இரு தமிழ் புராணச் சுருக்கத்தை ஸ்ரீ பகவத்பாதாளிடம் ஸமர்ப்பணம் செய்யும்போது ஸ்ரீயவாள் அமிருத வாக்கிது. ஸ்ரீ பரமாசார்யாளின் ஆசிர்வாத பலத்தால் ஸ்ரீவாமனபுராண சுருக்கமும் தமிழில் ஸ்ரீ அமரகலாவிலாஸனீ வெளியிட்டிருக்கிறது. உலகம் அதை ஆதரித்து நன்மைபெருக.

பாக்யசாலிகள். 27உ சென்னை மைலை ஆச்ரமத்தில் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீமஹா ஸன்னிதானத்தால் ஸ்ரீமான்களான டி. ஆர். ராமச்சந்திர அய்யருக்கு "தார்மிக துரந்தர" என்றும் ஏ. கிருஷ்ணஸ்வாமி அய்யருக்கு "பரோபகார சிந்தாமணி" என்றும், கே. பாலசுப்ரமண்யய்யருக்கு "தர்மரக்ஷாமணி" என்றும் பட்டமளிக்கப்பட்டது. இவையனைத்தும் அர்த்தம் நிறைந்த உசிதமான பட்டங்கள். ஆசிர்வாத புரஸ்ஸரமாக பரமசார்யாளளிக்கும் பட்டத்தின் பெருமையை எவரே உரைக்கவல்லவர்? இப் பட்டதாரிகளின் பாக்யமே பாக்யம்!! அச்சமயம் ஸ்ரீகாளஹஸ்தி ராஜாவும் பல்லாயிரம் பக்தசிகாமணிகளும் வந்திருந்தனர். பல பண்டிதர்களுக்கு சால்வை அளிக்கப்பட்டது.

வெ. ஸோமதேவ சர்மா.